# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.130/2019 |
| preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner Respondent | அ.சா.3 |
| Name : | | திரு.குமார் |
| Father's/Husband Name: | | திரு.ராசு |
| Village : | | ஒகலூர் |
| Taluk : | | குன்னம் |
| Age : | | 48 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.06.2023.

**முதல் விசாரணை :–**

01. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பெயின்டிங் வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு எங்கள் உறவினர்களான தனலெட்சுமி, கொளஞ்சி ஆகியோர் தாலிகொடியை பிச்சிட்டு போய்டாங்க ஸ்டேசன் வரைக்கும் வாங்க என்று சொன்னார்கள். அதனால் அவர்களுடன் மங்களமேடு காவல் நிலையத்திற்கு சென்றேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

தனலெட்சுமியும், கொளஞ்சியும் என் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யார் சொன்னார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எவ்வளவு பவுன், நகை எந்த இடத்தில் காணாமல் போனது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். எத்தனை பேர் நகையை பறித்து சென்றார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.